பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 08 2026 SATURDAY 6 45 AM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்று உரையாற்றுகிறார்.

2. தமிழ்நாட்டில் 58 மின்னணு உற்பத்தி நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறு விவசாயிகள் சங்க பிரதிநிதிகளுடன் தமிழக அரசு பேச்சு நடத்தியுள்ளது.

4. சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக 15 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணி - திண்டுக்கல் அணியையும், திருப்பூர் அணி - சேப்பாக் அணியையும் வென்றன.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்று உரையாற்றுகிறார்.

ஹரியானா மாநிலம், Sonipet வளாகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதியுடன் கூடிய, உயர் செயல்திறன் மிக்க Param Pragya என்ற அதிநவீன சூப்பர் கம்ப்யூட்டர் மையத்தையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் சிறந்த மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் உள்ளிட்ட விருதுகளையும் பிரதமர் வழங்கவுள்ளார்.

இந்த ஆண்டு, 3 ஆயிரத்து 336 மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளனர்.

>>>>><<<<<

தமிழ்நாட்டில் 58 மின்னணு உற்பத்தி நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த நிறுவனங்களில் செமிகண்டக்டர் உட்பட மின்னணு பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என்று கூறினார்.

தமிழ்நாட்டில் உள்ள 61 கல்வி நிறுவனங்களில் செமிகண்டக்டர் வடிவமைப்பு திறனை வளர்ப்பதற்கு மத்திய அரசு ஆதரவளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை ஐ.ஐ.டி., சென்னை அண்ணா பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி, திருச்சி தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் உள்ளிட்ட முக்கியமான கல்வி நிறுவனங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறு விவசாயிகள் சங்க பிரதிநிதிகளுடன் தமிழக அரசு பேச்சு நடத்தியுள்ளது.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில், மாநில அரசின் சார்பில் திரு. ஆனந்த், திரு. செங்கோட்டையன். திரு. ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட 7 அமைச்சர்கள் பங்கேற்றனர்.

விவசாயிகளுக்கான பயிர்க்கடனை மாநில அரசு முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் அளித்த கரும்புக்கான நிலுவைத்தொகையை உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாய சங்க பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக மாநில அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டப்பேரவை தேர்தலின் போது த.வெ.க. அளித்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்.

தமிழகத்திற்கு தேவையான நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தொகுதி மறுவரையறை சட்டத்திருத்த மசோதா தொடர்பாக தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

விழுப்புரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்று கூறினார்.

விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் திரு. தொல் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

*சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக 15 நீதிபதிகளை நியமித்து குடியரசுத்தலைவர் உத்தரவிட்டுள்ளார்.*

*சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை நிரப்பும் வகையில் 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க கடந்த மே மாதம் உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்திருந்தது.*

*இந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்ட குடியரசுத்தலைவர், பரிந்துரைக்கப்பட்ட 19 பேரில் 15 பேரை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து உத்தரவிட்டுள்ளார்.*

*இதன் மூலம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 66ஆக உயர்ந்து காலியிடங்களின் எண்ணிக்கை 9 ஆக குறைந்துள்ளது.*

*>>>>><<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்ற St-Louis செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற Praggnanandhaa-வுக்கு முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், உலகின் முன்னணி வீரர்கள் பங்கேற்ற இத்தொடரில், தன்னைவிட அதிக ரேட்டிங் கொண்ட அமெரிக்கா, உஸ்பெகிஸ்தான் மற்றும் ஜெர்மனி நாட்டு வீரர்களை எதிர்கொண்டு Praggnanandhaa வெற்றி வாகை சூடியுள்ளார்.*

*இதன் மூலம் சர்வதேச செஸ் அரங்கில், தான் ஒரு சிறந்த சாம்பியன் என்பதை அவர் மீண்டும் ஒருமுறை நிரூபித்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இளம் விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் வெற்றிபெறத் தேவையான ஆதரவையும், வழிகாட்டுதலையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழங்கி வருகிறது என்றும் திரு.விஜய் தெரிவித்துளார்.*

*>>>>><<<<<*

*திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அறநிலையத்துறைக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் மோசடி செய்த வழக்கில், தலைமறைவாக இருந்த சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மேலும், இவ்வழக்கின் முக்கிய இடைத்தரகராக செயல்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட ஜெயப்பிரகாஷும் சிபிசிஐடி முன்பு சரணடைந்துள்ளார்.*

முன்னதாக, **இருவரும்** சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி **செய்யப்பட்டன**.

>>>>><<<<<

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படவுள்ளது.

இது, கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில முதல் போக பாசனத்திற்கு பயன்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

கொலம்பியா நாட்டின் புதிய அதிபராக திரு. Abelardo De La Espriella பதவியேற்றுள்ளார்.

>>>>><<<<<

தாய்லாந்தில் பள்ளி ஒன்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8ஆக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

சீனா உரிமை கோரும் அருணாச்சலப்பிரதேசத்தின் 27 பகுதிகள் இந்தியாவிற்கு சொந்தமானது என்பதற்கான அதிகாரப்பூர்வ ஆவணங்கள் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மது பாலன் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூரில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் சேமிப்பு கிடங்கில் மாவட்ட ஆட்சியர் திருமதி. சினேகா ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், தாமரைப்பாக்கம் ஊராட்சி பகுதியில் காட்டாங்கல் கால்வாய் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க, அதிகாரிகளுக்கு ஆட்சியர் திருமதி. கவிதா அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோவிலில் நேற்று நடைபெற்ற திருவிளக்கு பூஜையில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

ஆடி மாத வெள்ளிக்கிழமையை முன்னிட்டு, காஞ்சிபுரம் அருள்மிகு காமாட்சியம்மன் கோவிலில் தங்கத்தேர் உற்சவம் நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணியை வென்றது.

முதலில் விளையாடிய திண்டுக்கல் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 170 ரன் எடுத்தது.

171 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நெல்லை அணி 17 புள்ளி 4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

முன்னதாக நடைபெற்ற சேப்பாக் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருப்பூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் விளையாடிய சேப்பாக் அணி, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்தது.

206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திருப்பூர் அணி 18 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு, இலக்கை எட்டி வெற்றிபெற்றது.

>>>>><<<<<